<u>சுருக்கம்</u>

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – கன்னியாகுமரி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள குறைந்த பரப்பளவு மற்றும் மக்கள் தொகை கொண்டுள்ள கிராம ஊராட்சிகளை இணைத்து (Amalgamation) மறுசீரமைப்பு செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

<u>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி [பரா–2(1)]த் துறை</u>

அரசாணை (நிலை) எண்.342

நாள்: 05.12.2025.
விசுவாவசு, கார்த்திகை – 19.
திருவள்ளுவர்ஆண்டு 2056.
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.142, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி [ப.ரா–2(1)]த் துறை, நாள்.23.11.2023.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15, அவர்களின் கடிதம் ந.க.எண்.69023/2023/ப.ரா–1.1, நாள்.25.11.2025.

-------

<u>ஆணை:</u>

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பு செய்வது தொடர்பாக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்கள் தலைமையில் மாநில அளவிலான உயர்மட்டக்குழு (High Level Committee) அமைக்கப்பட்டது. அதனடிப்படையில் பல்வேறு தேதிகளில் கூடி இப்பொருண்மைகள் மீது விரிவான ஆலோசனைகள் / விவாதங்கள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், ஊரக உள்ளாட்சி அமைப்புகளை மறுசீரமைப்பு செய்தல் தொடர்பாக அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்கள் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலி காட்சி மூலமாக ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. அதனைத் தொடர்ந்து ஊரக உள்ளாட்சி அமைப்புகள்

மறுசீரமைப்பு தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் உரிய கருத்துருக்கள் அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவில் கீழ்க்காணும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. **<u>கன்னியாகுமரி மாவட்டம்:</u>**

**திருவட்டாறு ஊராட்சி ஒன்றியம், பாலமோர் கிராம ஊராட்சியை சுருளகோடு கிராம ஊராட்சியுடன் இணைத்தல்**

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பாலமோர் கிராம ஊராட்சி 5 குக்கிராமங்களை கொண்டு மக்கள் தொகை 306 ஆக உள்ளது. மேலும், இவ்வூராட்சியில் முழுவதும் விவசாய தோப்புகளாக (Estates) உள்ளதாலும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட வேலைகள் இதுவரை நடைபெறவில்லை என்பதாலும், பாலமோர் கிராம ஊராட்சியை சுருளகோடு கிராம ஊராட்சியுடன் இணைத்து சுருளகோடு கிராம ஊராட்சியாக செயல்பட கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளது.

2. <u>வேலூர் மாவட்டம் :</u>

வேலூர் மாவட்டம், காட்பாடி ஊராட்சி ஒன்றியம், அவுலரங்கப்பள்ளி கிராம ஊராட்சி, கொண்டமநாயுடுபாளையம் கிராம ஊராட்சி மற்றும் வேலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சிறுகாஞ்சி கிராம ஊராட்சி மிக குறைந்த பரப்பளவு மற்றும் மக்கள் தொகை கொண்டுள்ளதால் அதனை கீழ்க்காணும் விவரப்படி அருகிலுள்ள ஊராட்சியுடன் இணைப்பதற்கு வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டுள்ளது:

I. காட்பாடி ஊராட்சி ஒன்றியம், அவுலரங்கப்பள்ளி கிராம ஊராட்சியினை பாலேகுப்பம் என்ற கிராம ஊராட்சியுடன் இணைத்தல், கொண்டமநாயுடு பாளையம் கிராம ஊராட்சியினை தெங்கால் என்ற கிராம ஊராட்சியுடன் இணைத்தல்.

II. வேலூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சிறுகாஞ்சி கிராம ஊராட்சியினை சதுப்பேரி என்ற கிராம ஊராட்சியுடன் இணைத்தல்.

3. எனவே, மேற்குறிப்பிட்ட கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பாலமோர் கிராம ஊராட்சியை சுருளகோடு கிராம ஊராட்சியுடனும், வேலூர் மாவட்டத்திலுள்ள அவுலரங்கப்பள்ளி கிராம ஊராட்சியினை பாலேகுப்பம் என்ற கிராம ஊராட்சியுடனும், கொண்டமநாயுடுபாளையம் கிராம ஊராட்சியினை தெங்கால் என்ற கிராம ஊராட்சியுடனும், சிறுகாஞ்சி கிராம ஊராட்சியினை சதுப்பேரி என்ற கிராம ஊராட்சியுடனும் இணைத்திட கன்னியாகுமரி மற்றும் வேலூர் மாவட்ட ஆட்சியர்களின் பரிந்துரையின் அடிப்படையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி

ஆணையர் பரிந்துரை செய்து கருத்துருவினை அரசுக்கு அனுப்பி உரிய ஆணை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேற்காண் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்க முடிவு செய்து, கன்னியாகுமரி மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள குறைந்த பரப்பளவு மற்றும் மக்கள் தொகை கொண்டுள்ள கிராம ஊராட்சிகளை இணைத்து (Amalgamation) கிராம ஊராட்சிகளை கீழ்க்காணுமாறு மறுசீரமைப்பு செய்து இணைப்பில் உள்ளபடி அரசு ஆணையிடுகிறது:

I. கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு ஊராட்சி ஒன்றியம், பாலமோர் கிராம ஊராட்சி சுருளகோடு கிராம ஊராட்சியுடன் இணைக்கப்படுகிறது.

II. வேலூர் மாவட்டம், காட்பாடி ஊராட்சி ஒன்றியம், அவுலரங்கப்பள்ளி கிராம ஊராட்சி பாலேகுப்பம் என்ற கிராம ஊராட்சியுடனும், கொண்டமநாயுடு பாளையம் கிராம ஊராட்சி தெங்கால் என்ற கிராம ஊராட்சியுடனும் இணைக்கப்படுகிறது மற்றும்

III. வேலூர் மாவட்டம், வேலூர் ஊராட்சி ஒன்றியம் சிறுகாஞ்சி கிராம ஊராட்சி சதுப்பேரி என்ற கிராம ஊராட்சியுடன் இணைக்கப்படுகிறது.

5. இவ்வாணையினைத் தொடர்ந்து, 1994–ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 4(1)–ன் கீழ் மாவட்ட அரசிதழில் உடன் அறிவிக்கை வெளியிட நடவடிக்கை தொடருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள், கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் வேலூர் மாவட்டம் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், இறுதி அறிவிக்கை வெளியிட்ட பின்பு, அதன் நகலை அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6. வேலூர் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊரக உள்ளாட்சி பதவிகளுக்கான பதவிக்காலம் முடிவுற்ற பின்னர் இந்த அரசாணை நடைமுறைப்படுத்தப்படும். கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராம ஊராட்சிகளை இணைத்து உருவாக்கப்படும் புதிய கிராம ஊராட்சி அடுத்து வரும் சாதாரண தேர்தலுக்கு வார்டுகள் பிரிக்கப்பட்டு மேற்கண்ட இணைப்பு நடைமுறைப்படுத்தப்படும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி மாவட்டம்.

மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர் மாவட்டம்.
இதர மாவட்ட ஆட்சித்தலைவர்கள் (சென்னை நீங்கலாக).

**நகல்**

முதலமைச்சர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி அமைச்சர் அவர்களின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை–9.
தலைமைச்செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச்செயலர்,
தலைமைச் செயலகம், சென்னை–9.
நிதித்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை
தனிச்செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

G. O. Binu 5-12-2025

பிரிவு அலுவலர்.

5/12/2025

## இணைப்பு.

## அரசாணை (நிலை) எண்.342, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள்.05.12.2025.

## ஒரு கிராம ஊராட்சியினை மற்றொரு கிராம ஊராட்சியுடன் சேர்த்தல்

## கன்னியாகுமரி மாவட்டம்:

| வ. எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | இணைப்பதற்கு முன் கிராம ஊராட்சியின் பெயர் (குக் கிராமங்களின் எண்ணிக்கையுடன்) | குக் கிராமங்களின் பெயர் | இணைத்த பின்பு கிராம ஊராட்சியின் பெயர் (குக் கிராமங்களின் எண்ணிக்கையுடன்) | குக் கிராமங்களின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1. | திருவட்டாறு | பாலமோர்(5) | சி.எம்.எஸ் | சுருளகோடு(14) | சி.எம்.எஸ் |
| 2. | | | காரிமணி | | காரிமணி |
| 3. | | | பாலமோர் | | பாலமோர் |
| 4. | | | ராணி பெல்போர்டு | | ராணி பெல்போர்டு |
| 5. | | | சீபில்டு | | சீபில்டு |
| 6. | | சுருளகோடு (9) | செல்லன்திருத்தி | | செல்லன்திருத்தி |
| 7. | | | காளிகேசம் | | காளிகேசம் |
| 8. | | | கஞ்சிக்குழி | | கஞ்சிக்குழி |
| 9. | | | கூவைக்காடு மலை | | கூவைக்காடு மலை |
| 10. | | | முக்கம்பாலை | | முக்கம்பாலை |
| 11. | | | பன்னியோடு | | பன்னியோடு |
| 12. | | | சுருளகோடு | | சுருளகோடு |
| 13. | | | பரளியார் | | பரளியார் |
| 14. | | | வீரப்புலி | | வீரப்புலி |

**வேலூர் மாவட்டம்:**

| வ. எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | இணைப்பதற்கு முன் கிராம ஊராட்சியின் பெயர் (குக் கிராமங்களின் எண்ணிக்கையுடன்) | குக் கிராமங்களின் பெயர் | இணைத்த பின்பு கிராம ஊராட்சியின் பெயர் (குக் கிராமங்களின் எண்ணிக்கையுடன்) | குக் கிராமங்களின் பெயர் |
|---|---|---|---|---|---|
| 1. | காட்பாடி | அவுலரங்கப்பள்ளி (2) | அவுலரங்கப்பள்ளி | பாலேகுப்பம் (7) | ஜி.வி.என்.கண்டிகை |
| 2. | | | அவுலரங்கப்பள்ளி அருந்ததி காலனி | | பாலேகுப்பம் |
| 3. | | பாலேகுப்பம் (5) | ஜி.வி.என்.கண்டிகை | | கோடவாரிபள்ளி |
| 4. | | | பாலேகுப்பம் | | கோடவாரிபள்ளி ஆதிதிராவிடர் காலனி |
| 5. | | | கோடவாரிபள்ளி | | பாலேகுப்பம் ஆதிதிராவிடர் காலனி |
| 6. | | | கோடவாரிபள்ளி ஆதிதிராவிடர் காலனி | | அவுலரங்கப்பள்ளி |
| 7. | | | பாலேகுப்பம் ஆதிதிராவிடர் காலனி | | அவுலரங்கப்பள்ளி அருந்ததி காலனி |
| 8. | | கொண்டமநாயுடு பாளையம் (5) | கொண்டமநாயுடு பாளையம் ஆ.காலனி | தெங்கால் (9) | கருங்கல் |
| 9. | | | மேல்கொண்டமநாயுடு பாளையம் | | தெங்கால் |
| 10. | | | கொண்டமநாயுடு பாளையம் | | காலனி |
| 11. | | | சித்தூர் சாலை ஓரம் கிராமம் | | ஆசிரமம் |
| 12. | | | கொண்டமநாயுடு பாளையம் அருந்ததி காலனி | | கொண்டமநாயுடு பாளையம் ஆ.காலனி |
| 13. | | தெங்கால் (4) | கருங்கல் | | மேல்கொண்டமநாயுடு பாளையம் |
| 14. | | | தெங்கால் | | கொண்டமநாயுடு பாளையம் |
| 15. | | | காலனி | | சித்தூர் சாலை ஓரம் கிராமம் |
| 16. | | | ஆசிரமம் | | கொண்டமநாயுடு பாளையம் அருந்ததி காலனி |
| 17. | வேலூர் | சிறுகாஞ்சி (1) | சிறுகாஞ்சி | சதுப்பேரி (9) | அகமேடு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18. | | சதுப்பேரி (8) | அகமேடு | | டாக்டர் அம்பேத்கர் நகர் |
| 19. | | | டாக்டர் அம்பேத்கர் நகர் | | ஜோகியர் காலனி |
| 20. | | | ஜோகியர் காலனி | | பூவை நகர் |
| 21. | | | பூவை நகர் | | சதுப்பேரி |
| 22. | | | சதுப்பேரி | | வைகை நகர் |
| 23. | | | வைகை நகர் | | முல்லை நகர் |
| 24. | | | முல்லை நகர் | | குறிஞ்சி நகர் |
| 25. | | | குறிஞ்சி நகர் | | சிறுகாஞ்சி |

ககன்தீப் சிங் பேடி
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.